இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

"எனது சதை உண்மையான உணவு. எனது இரத்தம் உண்மையான பானம். எனது சதையை உண்டு எனது இரத்தத்தைக் குடிப்போர் என்னோடு இணைந்திருப்பர், நானும் அவர்களோடு இணைந் திருப்பேன். வாழும் தந்தை என்னை அனுப்பினார். நானும் அவரால் வாழ்கிறேன். அதுபோல் என்னை உண்போரும் என்னால் வாழ்வர். விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த உணவு இதுவே; இது நம் முன்னோர் உண்ட உணவு போன்றது அல்ல. அதை உண்டவர்கள் இறந்து போனார்கள். இவ்வுணவை உண்போர் என்றும் வாழ்வர்." (யோவான் 6: 55-58)

# கடவுளின் பெயரால் வன்முறை வேண்டாம்!

## திருத்தந்தை வலியுறுத்து

**வத்திக்கான்:** மத நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கான உங்கள் உன்னத முயற்சியில் தொடரவும், பல்வேறு மதங்களுக்கிடையில் உள்ள தவறான புரிதல்களைக் களைந்து, நம்பிக்கையான உரையாடல் மற்றும் அமைதிக்கான பாதைகளை உருவாக்க முயற்சி செய்யவும் நான் உங்களை ஊக்குவிக்கிறேன் என்று கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

ஆகஸ்ட் 7, புதனன்று, இத்தாலியில் உள்ள ஆப்கான் குழுமம் ஒன்றை திருப்பீடத்தில் சந்தித்தபோது இவ்வாறு கூறிய திருத்தந்தை, மத நல்லிணக்கத்தை மேம்படுத்துவது என்பது சில வேளைகளில் பின்னடைவை சந்திக்கிறது; ஆனால், நீங்கள் உண்மையிலேயே சமூகத்திற்கு நல்லது செய்ய விரும்பினால், அமைதியை வளர்க்க விரும்பினால், இதன் சாத்தியமான பாதையை விடாமுயற்சியுடன் தொடர வேண்டும் என்றும் அவர்களைக் கேட்டுக் கொண்டார்.

முன்னதாக தனது உரையின் தொடக்கத்தில், கடந்த பத்தாண்டுகளில் ஆப்கானிஸ்தான் ஒரு சிக்கலான மற்றும் துயரமான வரலாற்றைக் கொண்டுள்ளது என்றும், இது தொடர்ச்சியான போர்கள் மற்றும் இரத்தக் கறை படிந்த மோதல்களால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் எடுத்துக்காட்டினார் திருத்தந்தை.

ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தானிய சமூகத்தின் மற்றொரு முக்கியமான பண்பும் உண்மையில் நினைவில் கொள்ளப்பட வேண்டும், அதாவது, அவர்கள் பல மக்களால் ஆனவர்கள், ஒவ்வொருவரும் தங்கள் கலாச்சாரம், மரபுகள் மற்றும் முழு குடியுரிமை உரிமைகள் வழங்கப்படுவதற்கான ஓர் இடத்தை உருவாக்க வேண்டும் என்றும் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார் திருத்தந்தை.



இத்தாலியில் உள்ள ஆப்கான் குழுமத்தினருடன் திருத்தந்தை

தனித்துவமான வாழ்க்கை முறையைப் பற்றி பெருமிதம் கொள்கிறார்கள் என்றும் தெரிவித்தார் திருத்தந்தை..

மேலும் மதக் காரணி, அதன் இயல்பிலேயே, முரண்பாடுகளின் கடுமையை மென்மையாக்க உதவுவதோடு, அனைவருக்கும் சமமான நிலையில், பாகுபாடு இல்லாத இன்னும் பல வேளைகளில், மதம் கையாளப்பட்டு, கருவியாக மாற்றப்பட்டு, எதிர் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறது என்று சுட்டிக்காட்டிய திருத்தந்தை, இதுபோன்ற சந்தர்ப்பங்களில், மதம் மோதலுக்கும் வெறுப்புக்கும் காரணமாகிறது என்றும் இது வன்முறைச் செயல்களுக்கு வழிவகுக்கும் என்றும் குறிப்பிட்டார்.

கெய்ரோவின் அல்-அசார் (Al-Azhar) மசூதியின் பெரிய தலைவரான அகமது முகமது அல்-தாயிப் (Ahmad Muhammad al -Tayyib) அவர்களுடன் 2019-ஆம் ஆண்டு, பிப்ரவரி 4-ஆம் தேதியன்று, அபுதாபியில் கையெழுத்திட்ட உலக அமைதி மற்றும் ஒருங்கிணைந்து வாழ்வதற்கான மனித சகோதரத்துவம் குறித்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'மதங்கள் ஒருபோதும் போர், வெறுப்பு மனப்பான்மை, விரோதம் மற்றும் தீவிரவாதத்தை தூண்டக்கூடாது, வன்முறையையோ அல்லது இரத்தம் சிந்துவதையோ தூண்டக்கூடாது' என்பதை விளக்கிய திருத்தந்தை, இந்த சோகமான உண்மைகள் மத போதனைகளில் இருந்து விலகியதன் விளைவுதான் என்றும் கூறினார்.

ஆகவே, வெறுப்பு, வன்முறை, தீவிரவாதம் மற்றும் குருட்டு வெறியைத் தூண்டுவதற்கு மதங்களைப் பயன்படுத்துவதை நிறுத்துமாறும், கொலை, நாடுகடத்தல், பயங்கரவாதம் மற்றும் அடக்குமுறையை நியாயப்படுத்த கடவுளின் பெயரைப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறும் நாங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம் என்றும் விண்ணப்பித்தார் திருத்தந்தை.

செல்வராஜ் சூசைமாணிக்கம் - வத்திக்கான்

# தம்பினில், புனித ஜான் மரிய வியான்னி திருவிழா

தம்பின், நெகிரி செம்பிலான்: இங்குள்ள புனித ஜான் மரிய வியான்னி பங்கின் திருவிழா கடந்த ஆகஸ்ட் முதலாம் திகதி தொடங்கி, 4 ஆம் தேதி ஞாயிறு வரை "கிறிஸ்துவில் வேரூன்றியிருத்தல் " என்ற கருப்பொருளில் கொண்டாடப்பட்டது. தொடக்கமாக, பங்கன் சகோ. ரிச்சர்ட் கணேஷ் தலைமையில் கிறிஸ்துவில் உண்மையிலேயே வேரூன்றியிருந்தால் என்ன பயன் என்பதைப் புரிந்துகொள்ள பங்கு மக்கள் அனைவருக்கும் ஒரு சிறப்பு விரிவுரை நடத்தப்பட்டது. இதன் காரணமாக, இந்த ஆண்டு கொண்டாட்டம் அர்த்தமுள்ள வகையில் பங்கு இறைமக்கள் திருப்பலியில் பங்கேற்க பேருதவியாக இருந்தது

மூன்று நாள் கொண்டாட்டத்தின் முதல் நாளன்று, 'அருள்பணியாளர்- கடவுளின் அரசில் பணி செய்தல்' எனும் துணை கருப்பொருளில் கோலாலம்பூர் உயர் மறைமாவட்டத்தின் பேராயர் ஜூலியன் லியோவ் அவர்களின் தலைமையில் கோலாலம்பூர் உயர் மறைமாவட்டம் மற்றும் பிற மறைமாவட்டங்களிலிருந்து வருகைத் தந்த 24 அருள்பணியாளர்களுடன் திருப்பலி கொண்டாடப்பட்டது.



அன்று மறையுரை ஆற்றிய அருள்பணியாளர்கள் வின்சண்ட் தோமஸ் மற்றும் லோரன்ஸ் இங் ஆகியோர் புனித ஜான் மரிய வியான்னியின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி குருத்துவப் பணியை நிறைவாக ஆற்ற வேண்டிய கடப்பாட்டை நினைவூட்டினர். திருப்பலிக்குப் பிறகு, கெபியின் மறு அர்ப்பணிப்புக்கான இறைவேண்டலுக்கு அருள்பணி பீட்டர் அந்தோனி தலைமை வகித்தார், தொடர்ந்து, பேராயர் கெபியை ஆசீர்வதித்துத் திறந்து வைத்தார்.

இரண்டாவது நாளன்று, மலாக்கா, குருபோங் குவாடலூப்பே அன்னை பங்கின் அருள்பணியாளர் ஜோசப் ஹெங், மேலும் ஆறு அருள்பணியாளர்களோடு திருப்பலியைக் கொண்டாடினார். இந்த ஆண்டு பல்வேறு மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களில் இருந்து திரளான இறைமக்கள் வருகைப் புரிந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாண்டுக்கான திருவிழாக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, ஆகஸ்டு 3-ம் திகதி, சனிக்கிமையன்று காலை 9.30 மணிக்கு,

தொடர்ச்சி, அடுத்துப் பக்கம்

# கிறிஸ்து அரசர் பங்கில் இருதய நல விழிப்புணர்வு சொற்பொழிவு நடைபெற்றது

ஜொகூர், கூலாய்: இங்குள்ள கிறிஸ்து அரசர் பங்கில் தமிழ் மேய்ப்புப்பணிக்குழு CTK StayHealthy பிரிவின் கீழ் கடந்த ஆகஸ்ட் 20ஆம் திகதி, 2024 அன்று இருதய நல விழிப்புணர்வு சொற்பொழிவு ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. நிகழ்வு, பங்குத் தந்தை மத்தியூ பன் அவர்களின் ஆதரவுடன் சிறப்பாக நடைபெற்றது.

இருதய நலம் குறித்த இச்சொற்பொழிவை அழைக்கப்பட்ட மருத்துவர் ஜொசுவா தாஸ் சிறப்பாக Body Mass Index-BMI பற்றிய விவரங்களை விளக்கினார். ஏறக்குறைய 50 பேர் பங்கெடுத்து




இச்சொற்பொழிவின்போது, இருதய நலம் பராமரிப்பு குறித்த பல கேள்விகள் எழுப்பப் பட்டன.

மேலும், மற்றொரு சிறப்பு நிகழுவாக அன்று, சிறுவர் நடவடிக்கை அறை என ஒன்றைத் தயாரித்து, அதில் சிறுவர்களுக்கு ஏற்றவாறு இருதயம் பற்றிய காணொளி விளக்கம், கேள்வி பதில் ஆகிய அம்சங்கள் இந்நிகழ்வுக்குச் சிறப்பு சேர்த்தன.



நிறைவாக, பங்குத்தந்தை சார்பாக, திருத்தொண்டர் அருமைதாஸ் அவர்கள், பயனுள்ள இருதய நலத் தகவல்களை வழங்கிய மருத்துவர் ஜொசுவா அவர்களுக்கு நன்றி சொல்லும் வகையில் ஒரு நினைவு பரிசு கொடுத்ததோடு, நன்றியுரை வழங்கி, ஆசீர்வாதத்துடன் நிகழ்வை நிறைவுசெய்தார்.

*-மார்க், கூலாய்*

# 'தூய ஆவியின் உடனிருப்பில் உரையாடல் வழி பகுத்தறிதல்' வட்டார தீபகற்ப மலேசியா பேரவை 2024

## தொடர் விளக்கக் கட்டுரை

கோலாலம்பூர்: ஜொகூர், பிளந்தோங்கில் மஜோடி மையத்தில் இம்மாதம் ஆகஸ்ட் 25 முதல் 27 வரை நடைபெறவிருக்கும் 2024-ம் ஆண்டுக்கான வட்டார மேய்ப்புப்பணி பேரவையில் பங்கேற்க விருக்கும் (RPA2024) கோலாலம்பூர் உயர்மறைமாவட்டத்தைச் சேர்ந்த பங்கேற்பாளர்களுக்கான இயங்கலை வழி அமர்வு சமீபத்தில் நடைபெற்றது.

Msgr ஜூட் மிராண்டா, அருள்பணி சைமன் லெப்ராய் மற்றும் அருள்பணி டாக்டர் லோரன்ஸ் இங் ஆகியோர் அடங்கிய ஒருங்கிணைப்பு குழுவால் இந்த அமர்வு வழிநடத்தப்பட்டது. இதன்வழி பங்கேற்பாளர்கள் நடைபெறவுள்ள பேரவையில் பலனுள்ள வகையில் பங்கேற்க தேவையான உபகரணங்களும் விபரங்களும் வழங்கப்பட்டது.

முதலாவதாக, Msgr ஜூட் மிராண்டா அவர்கள் மலேசிய ஆயர்களால் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள குடும்பம், திருஅவை, சூழலியல் மற்றும் சமூகம் போன்ற முக்கியப் பகுதிகளைக் கண்டறிய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத் தினார். மலேசிய ஆயர்களால் முன்மொழியப்பட்டுள்ள குடும்பம், திருஅவை, சூழலியல் மற்றும் சமூகம் ஆகிய பகுதிகளை வட்டார மேய்ப்புப் பணி பேரவை (RPA) ஆய்ந்தறிய வேண்டும் என்றார்.

இரண்டாவதாக, அருள்பணி சைமன் லெப்ராய் அவர்கள் பேரவைக்கான கால அட்டவணை மற்றும் கட்டமைப்பை விவரித்ததோடு, இப்பேரவையில் பயன் படுத்தப்படுள்ள கூட்டொருங்கியங்க அல்லது சினோடல் செயல்முறையின் முக்கியத்துவத்தை விவரித்தார். குறிப்பாக "ஆவியில் உரையாடல்" முறை. பேரவையின் செயல்பாடுகளுக்கு இந்த முறை ஒன்றிப்பு, பங்கேற்பு மற்றும் தூதுரைப்பணி ஆகியவற்றின் உணர்வை ஊட்டுவதற்கு ஏற்க உள்ளது என்றார்.

மூன்றாவதாக, டாக்டர் லோரன்ஸ் இங் **வட்டார மேய்ப்புப் பணி பேரவைக்கான** (RPA2024) தயாரிப்பு குறித்த நடைமுறை வழிகாட்டியைத் தெளிவுப்படுத்தினார். இந்த வழிகாட்டியில் நான்கு முக்கிய பகுதிகளை உள்ளடக்கிய தொகுப்பு ஆவணத்தை மறுஆய்வு செய்வதன் முக்கியத்துவத்தை அவர் அடிக்கோடிட்டுக் காட்டினார்.

நிறைவாக, பேரவையின் வெற்றியானது பங்கேற்பாளர்களின் ஆழ்ந்த சிந்தனை, இறைவேண்டல், பகுத்தறிவு மற்றும் விவாதங்களில் முழுமையாகப் பங்கேற்றல் ஆகியவற்றுள் அடங்கியுள்ளது என்பதை ஒருங்கிணைப்பாளர்கள் வலியுறுத்தியுள் ளனர். (தொடரும்)

முதல் பக்கத் தொடர்ச்சி.

.மறைக்கல்வி ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் அருள்பணி கிறிஸ்தபர் அவர்கள் சிறுவர் திருப்பலியை நிறைவேற்றனார். அன்று தொடர்ந்து, பிறபகல் 2.30க்கு நோயாளிகள் மற்றும் முதியோருக்கான குணமளிப்பு திருப்பலி கொண்டாடப்பட்டது. இவ்வாண்டு இக்குணமளிப்புக் கொண்டாட்டத்தில் மதிப்புகுரிய கர்தினால் செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்கள் சிறப்பு வருகைப் புரிந்து அனைவருக்கும் இறையாசீர் வழங்கினார் என்பது இறைமக்களுக்கு மனநிறைவை வழங்கியதொரு நிகழ்வாகப பேசப்பட்டது.

அன்று மாலை 4 மணிக்கு, தம்பின் பகுதியின் அரசபொறுப்பாளர் YTM Tunku Besar, YAM Che Puan Anis மற்றும் பிள்ளைகளின் வரவு இவ்வாண்டு கொண்டாட்டத்திற்கு மேலும் சிறப்பு சேர்த்தது எனலாம்.

இத்திருவிழாக் கொண்டாட்டத்தின் உச்சமாக மதிப்புக்குரிய கர்தினால் டத்தோ ஸ்ரீ செபஸ்டியன் பிரான்சிஸ் அவர்களின் தலைமையிலான திருப்பலி கொண்டாட்டம் அமைந்தது. அவர்தம் மறையுரையில் புனித ஜான் மரிய வியான்னியின் துறவற அடிச்சுவடுகளைப் பின்பற்றி கிறிஸ்துவின் சீடர்களாக அன்றாட வாழ்வில் நிகழ வேண்டிய



*கர்தினால் செபஸ்தியன் பிரான்சிஸ்*

ஆன்மீகப் புரட்சியைப் பற்றி கர்தினால் எடுத்துரைத்தார். நற்கருணைக் கொண்டாட்டத்திற்குப் பிறகு, புனித ஜான் வியானியின் திருவுருவ சுரூபம் திருப் பவனியாகக் கொண்டுசெல்லப்பட்டது. இவ்விழாவில் ஏறக்குறைய ஆயிரம் இறைமக்கள் கலந்து கொண்டனர் என தெரிவிக்கப்பட்டது. நிறைவாக, அனை வருக்கும் இரவு உணவு வழங்கப் பட்டது.

மறுநாள், ஞாயிறு விழா திருப்பலியானது மெட்ரிக்குலேசன் கல்லூரி மாணவர் களோடு, தீயணைப்பு பயிற்சியாளர்கள், திருயாத்திரையாளர்கள் மற்றும் பங்கு மக்கள் ஆகியோரின் பங்கெடுப்போடு இவ்வருட பங்குத் திருவிழாக் கொண் டாட்டம் ஒரு நிறைவை எய்தியது.

# வீட்டிலும் வீதியிலும் நாமே நற்கருணையின் பிரதிபலிப்பு

இன்று ஆண்டின் பொதுக்காலம் இருபதாம் வாரத்தில் நுழைகிறோம். இன்றைய முதல் வாசகம், கடவுள் தரும் வாழ்வைப் பெற்றுக்கொள்ளத் தேவையான ஞானத் தைப் பற்றி பேசுகிறது. ஞானம் தயார் செய்து அளிக்கும் இன்சுவை விருந்தில் பங்கேற்க அறியாப்பிள்ளைகள் அனை வருக்கும் அழைப்பு விடுக்கப்படுகிறது. இன்றைய இரண்டாம் வாசகத்தில் திருத்தூதர் பவுல், நமது நடத்தையைப் பற்றி கருத்தாய் இருக்குமாறு அழைப்பு விடுக்கிறார். இவ்வுலகின் தீயப் பழக்க வழக்கங்களுக்கு அடிமையாகாதவாறு, ஞானத்தோடு வாழ நாம் அழைக்கப் படுகிறோம். நமது சொல்லும், செயலும் ஆண்டவரின் மாட்சியை பறைசாற்றும் வகையில் அமைய வேண்டுமென்று பவுல் எடுத்துரைக்கிறார்.

தூய பவுல் எபேசியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய இரண்டாம் வாசகத்தில் கூட, "ஞானமற்றவர்களாய் ஞானத்தோடு வாழுங்கள்; அறிவிலிகளாய் இல்லாமல், ஆண்டவருடைய திருவுளம் யாது எனப் புரிந்துகொள்ளுங்கள்" என்றுதான் வாசிக் கின்றோம். அப்படியானால், ஆண்டவர் இயேசு நற்கருணையில் உடனிருக்கிறார் என்று அறிவதே ஞானம், அந்த நற்கருணை ஆண்டவர் மீது நம்பிக்கை வைத்து வாழ்வதே வாழ்விற்கான வழி என்பதைப் புரிந்துகொண்டு வாழவேண்டும்.

"வாருங்கள், நான் தரும் உணவை உண்ணுங்கள்; நான் கலந்து வைத்துள்ள திராட்சை இரசத்தை பருகுங்கள்; பேதைமையை விட்டு விடுங்கள்; அப்பொழுது வாழ்வீர்கள்" என்று சொல்வதாக வாசிக்கின்றோம். ஆம், நம்மிடம் இருக்கின்ற 'நற்கருணை குறித்த பேதைமையை விட்டுவிட்டு, நற்கருணை யில் ஆண்டவர் இயேசு உண்மையாகவே உடனிருக்கின்றார் என்று நம்புகின்றபோது வாழ்வடைவோம் என்பது உறுதி. மண்ணக வாழ்வு மரித்துப் போகச் செய்யும். மடிந்து முடிந்து போகின்ற வாழ்வை நாம் பெற்றுக் கொள்ளவில்லை.

நம்முடைய ஆன்மா அழியாது. அதற்கு முடிவென்பதில்லை. அது என்றென்றென்றும் நிலையான பேரின் பத்தைப் பெற்றுக் கொள்ளும். இதற்காகவே எல்லாரும் நிலையான வாழ்வு பெற வேண்டும் என்பதற்காகவே அவர் தியாகம் செய்தார்.

இன்றைய நற்செய்தியில் ஆண்டவர் "மானிட மகனுடைய சதையை உண்டு அவருடைய இரத்தத்தைக் குடித்தாலொழிய நீங்கள் வாழ்வடைய மாட்டீர்கள்" என்கிறார். இயேசுவின் சதையை உண்டு, இரத்தத்தைக் குடித்தல் என்பது, இயேசுவாகவே வாழ்வதாகவும். இயேசு



வாகவே நாம் வாழ்கின்ற போது நிலைவாழ்வினைப் பெற்றுக்கொள்வோம் என்பது உறுதி ஆகவே. நாம் நம்முடைய பலவீனங்களை, குற்றங்குறைகளைப் போக்கி ஆண்டவர் இயேசுவின்மீது கொண்ட நம்பிக்கையை வாழ்வாக்கு

### பொதுக்காலம்-20-ஆம் ஞாயிறு

| | |
|---|---|
| முதல் வாசகம் | நீமொ 9:1-6 |
| திரு.பாடல் | 34: 1-2. 9-10.11-12. 13-14 |
| 2-ம் வாசகம் | எபே 5: 15-20 |
| நற்செய்தி | யோவான் 6:51-58 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2 (B)**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை- வாரம் 4**

கின்றபோது நிலைவாழ்வினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

தியாகத்தால் விளைகின்ற வாழ்வு நிலையான இன்பத்தைத் தரும். இத்தகைய தியாகத்தால் விளைந்தது தான் இயேசுவின் மரணம். இந்த மரணத்தையே அனுதின பலியிலே நினைத்து கொண்டாடி மகிழ்கின்றோம். அழியாமைக்கென்றே படைக்கப்பட்ட மனிதர்களாகிய நாம் அழியாத ஆன்ம உணவினை நம்பிக் கையோடு பெற்று, அவரோடு வாழ்வோம் என்ற உறுதியோடு பங்கெடுக்க முன் வருவோம்.

த. ஜோசப் சகாய ஆனந்த், மலாக்கா.